**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.**

**அ.வ.எண்.376/2009**

**நாள்** - 19.07.2019

**பெயர்** - மோகணசுந்தரம்

**சாட்சி** - PW1

**விசாரணை தொடங்கும் நேரம்** -12.35pm

**வாதி தரப்பு சாட்சி 1, 1-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை -**

நான் தாக்கல் செய்துள்ள கூடுதல் பிரமாண வாக்குமூலம் மற்றும் கூடுதல் ஆவணங்களை குறுக்கு விசாரணையின்போது விடுப்பட்ட விவரங்களை சரி செய்யவே இந்த ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த ஆவணங்களை வேறு வழக்கில் தாக்கல் செய்துள்ளதால், அதன் சான்றிட்ட நகல்களை பெற்று தற்போது தாக்கல் செய்கிறேன். என் பிரமாண வாக்குமூலத்தில் வாசா ஆ11-ன் தேதியானது 26.11.1868 என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த ரிகால் மனுவில் தேதி 26.11.1869 என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் 1868-ல் பதிவு செய்யப்பட்டு, 1869-ல் வழங்கப்பட்டது. வாசா ஆ11-ல் சர்வே எண்ணோ பைமாஸ் எண்ணோ குறிப்பிடாமல், வெறும் விஸ்தீரணம் மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தற்போது தான் சர்வே எண் குறிப்பிடப்பட்டது. அப்போது சர்வே எண் இல்லை. வழக்கு சொத்தின் விவரத்தில் சர்வே எண்.781-ல் 7 ஏக்கர் 15 செண்ட என்று குறிப்பிடப்பட்டள்ளது என்றால் சரிதான். ஆனால் அது தட்டச்சு பிழை. வாசா ஆ11-ல் 6 ஏக்கர் 78 செண்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் 4 உரிமை பத்திரங்கள் உள்ளன, அனைத்தையும் சேர்த்தால் 14 ஏக்கர் 8 செண்ட் வரும். இந்த வழக்கில் நான் இந்த உரிமை பத்திரத்தை மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வாசா ஆ12 பதிவு செய்யப்படாத உயில் ஆவணம் ஆகும். மேற்படி உயில் எந்த தேதியில் யார் பெயரில் எழுதிக்கொடுக்கபட்டது என்றால், தேதி

நியாபகம் இல்லை, மோகணசுந்தரம் பெயருக்கு எழுதப்பட்டது. L.A.R.K.T. Rajamaniammal அவர்களால் எழுதப்பட்டது. ராஜமணியம்மாளின் இறப்புச் சான்றிதலோ, வாரிசுரிமை சான்றிதலோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. ராஜமணியம்மாளுக்கு 5 மகன், 3 மகள்கள் கௌசல்யா, கல்யாணசுந்தரம், சண்முக சுந்தரம், சோமசுந்தரம், மோகணசுந்தரம், ஞானசுந்தரம், சுசீலா, சுந்தரி. இவர்கள் அனைவரும் வாரிசுகள் ஆவார்கள். இத்தனை வாரிசுகள் இருக்கும்போது என் பெயருக்கு மட்டும் உயில் எழுத காரணம் என்னவென்றால் இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.402/1981 நான் தான் சாட்சியம் அளித்தேன் அதனால் என் பெயருக்கு எழுதி வைத்தார். உண்மையில் ராஜாமணியம்மாளுக்கு சொத்தில் உரிமை இருந்திருந்தால் அனைத்து வாரிசுகளுக்கும் உயில் எழுதி வைத்திருப்பார் என்றாலும், உரிமையில்லாத சொத்து என்பதாலும், இந்து அறநிலைய துறைக்கு சொந்தமான சொத்து என்பதால் என் தாயை அழைத்து நானே ஒரு உயில் ஆவணம் ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. அ.வ.எண்.137/1969-ல் ராஜாமணியம்மாளை தான் நிர்வாகியாக நியமித்தனர். செங்கல்பட்டு சார்பு நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்டார். வாசா ஆ12-ல் ஆவணத்தில் யார் யார் சாட்சி கையொப்பமிட்டனர் என்றால் பாளையம் மற்றொருவர் யார் என்று நியாபகமில்லை. வாசா ஆ12-ல் சாட்சி கையொப்பமிட்ட இடத்தில் அவர்களை விலாசமோ, தகப்பனார் பெயரோ குறிப்பிட்டிருக்கவில்லை என்றால் சரிதான். இந்த உயில் சாசனத்தில் சர்வே எண்.779/1ஏ-ல் 4 ஏக்கர் 85 செண்ட், 779/3-ல் 71 செண்ட், 780/3-ல் 1 ஏக்கர் 36 செண்ட், 781-ல் 7 ஏக்கர் 16 செண்ட் உள்ளது. இந்த உயில் சாசனத்தில் சொத்து விவரம் என்று எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வாசா ஆ12- என்னால் போலியாக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்பதால் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தற்போது வழக்கு சொத்திற்கான பட்டா நெய்தவாயல் தண்ணீர் பந்தல் சத்திரம் டிரஸ்டி தற்கால தற்மகர்த்தா என்ற பெயரில் தான் இருக்கிறது என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் பட்டா ஆவணத்தில் பெயர் குறிப்பிட்டிருக்கவில்லை என்றால் சரிதான். ஆனால் அசல் ஆவணத்தில் உள்ளது. அசல் பட்டாவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்த வாசா ஆ4-ஆவணத்தில் பட்டா என் பெயரில் உள்ளது. வழக்கு தாக்கல் செய்த பின்னர் வருவாய்த்துறை அதிகாரியின் உதவியோடு

பட்டாவை என் பெயரில் மாற்றியுள்ளேன் என்றால் சரியல்ல. 05.08.2016-ல் வருவாய்த்துறையில் மனு கொடுக்கப்பட்டு மேற்படி பட்டாவானது தற்கால தர்மகர்த்தா பெயரில் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

**விசாரணை முடியும் நேரம் -1.00pm**